**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.4/2026**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், கேளம்பாக்கம் காவல் நிலையம், குற்ற எண். 343/2025 |
| 2. | எதிரியின் பெயர் | ரம்யா |
| 3. | எதிரியின் தந்தை / கணவர் பெயர் | செல்வகுமார் |
| 4. | எதிரியின் தொழில் | – |
| 5. | எதிரியின் முகவரி | எண்.149, பேஸ்–3 ஜி ஸ்கொயர், ஏகாட்டூர், திருப்போரூர், செங்கல்பட்டு |
| 6. | எதிரியின் வயது | 36/2025 |
| 7. | எதிரியின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 10.09.2025 |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.01.2026 |

| | | |
|---|---|---|
| 10. | எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 26.02.2026 |
| 11. | எதிரி பிணையில் சென்ற நாள் | 14.09.2025 |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 26.02.2026 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 17.03.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 23.03.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு 03.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 17.03.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த **குற்ற உதவி வழக்கறிஞர் நிலை– i** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.டேவிட்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

ஏகாட்டுரை சேர்ந்த அ.சா.1ன் வீட்டருகே கடந்த 10.09.2025 அன்று காலை 07.30 மணியளவில் அவரது குழந்தையை ஏற்ற வந்த பள்ளி வாகனம் செல்லமுடியாமல், எதிரியின் வீட்டு வாசலில் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்ததாகவும், அதை கேட்க சென்ற அ.சா.1ன் அக்கா கணவர் அ.சா.3 ஐ எதிரி பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கற்கலால் தாக்கியதாகவும், அதை தடுக்க சென்ற அ.சா.1 மற்றும் அவரது சகோதரி அ.சா.2 ஆகியோரை தாக்கியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்தாக எதிரி மீது கேளம்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர், பிரிவுகள் 296(b), 115(2) மற்றும் 351(2) பா.நி.ச–ன்வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு பிரிவு 230 பா.நா.சு.ச–வின் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை குறித்து வினவியபோது, எதிரி அதனை மறுத்ததால் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு முதல் தோற்ற வழக்கு காணப்பட்டதால் எதிரிக்கு எதிராக பிரிவுகள் 296(பி), 118(1) மற்றும் 351(3) பா.நி.ச–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு,

எதிரிக்கு தமிழில் படித்து காட்டி வினவியபோது எதிரி அதனை மறுத்ததால், அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றசாட்டுக்கள் குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்;**

i. மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து காயமுற்ற அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் அன்று மதியம் திருப்போரூர் அரசு மருத்துவமமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர். அங்கு பணியில் இருந்த மருத்துவர் பாரதி என்பவர் அவர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளார். பின்பு அ.சா.1. அன்றைய தினமே கேளம்பாக்கம் காவல் நிலையம் சென்று சம்பவம் சம்மந்தமாக அ.சா.ஆ.2/புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரை பெற்ற காவல் உதவி ஆய்வாளர் திரு.ஹரிதாஸ் என்பவர் அப்போதே குற்ற எண்.343/2025, ச/பி. 296(பி), 115(2) மற்றும் 351(2) பா.நி.ச. கீழ் அ.சா.ஆ.3/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

ii. பின்பு அன்று மதியம் 03.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முகமது ரசித் மற்றும் இந்திராணி ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 4/பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5/மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் லட்சமி நாராயணன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii. இவ்வழக்கின் எதிரியை 14.09.2025 அன்று காலை 10.30 மணியளவில் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின் காயமுற்ற அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோருக்கு வழக்கப்பட்ட அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8/கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணையை நிறைவு செய்து எதிரி மீது மேற்கண்ட பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. எதிரிக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)ஆ பா.நா.சு.ச–வின் கீழ் வினவியபோது எதிரி தனக்கு எதிரான

சாட்சியங்களை மறுத்துள்ளார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தார்.

6. அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை – i தனது வாதத்தில், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7. மாறாக எதிரி தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிபடுத்தும் வகையில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

9. எதிரி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை பொது ஆபாசமாக திட்டியதாகவும், கற்களால் தன்னிச்சையாக தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், அ.சா.1 சம்பவ நாளன்று எதிரியின் வீட்டருகே பள்ளி வாகனம் செல்ல முடியாமல் அவர் வாகனத்தை நிறுத்திவைத்திருந்தை கேட்க சென்ற அ.சா.3 ஐ எதிரி ஆபாசமாக திட்டியதாகவும், கற்களால் தாக்கியதாகவும், அதை தடுக்க சென்ற அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரையும் தாக்கி சொற்பாகயம் ஏற்படுத்தியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்தாக குறிப்பிட்டுள்ளார்.

10. ஆனால் அ.சா.1 இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட போது, எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், எதிரி தங்களை ஆபாசமாக திட்டவோ தாக்கவோ மற்றும் கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம்

அளித்துள்ளார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களுடைய சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை சார்ந்து எதிரி தங்களை ஆபாசமாக திட்டவோ, தாக்கவோ மற்றும் கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால், அவர்களின் சாட்சியம் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்த போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. இவ்வழக்கின் பிரதான சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் பிற சாட்சிகள் அனைவரும் விசாரணை செய்வதிலிருந்து விலக்கப்பட்டு, புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அவரது கையெழுத்துக்களை பரிச்சயம் பெற்ற கேளம்பாக்கம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. அ.சா.4 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவருடைய சாட்சியம் ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. எனவே அ.சா.4—ன் சாட்சியத்தின் அடிப்படையில்

மட்டுமே எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டதாக தீர்மானிக்க முடியாது.

13. எனவே அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை பொது ஆபாசமாக திட்டியது, கற்களால் தன்னிச்சையாக தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியது மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாக ஆகியவை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி பிரிவுகள் 296(பி), 118(1) மற்றும் 351(3) பா.நி.ச.–வின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 277(1) பா.நா.சு.ச–வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்து இல்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (23.03.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI    Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. நிஷாந்தி (காயமுற்ற புகார்தாரர்) |
| அ.சா.2 | திருமதி. பிரியதர்ஷினி (காயமுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. சதீஷ்குமார் ( காயமுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. மலைசெல்வம் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.09.2025 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 12.09.2025 | புகார் |
| அ.சா.ஆ.3 | 12.09.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 12.09.2025 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 12.09.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 14.09.2025 | அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 14.09.2025 | அ.சா.2 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 14.09.2025 | அ.சா.3 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |

**அரசு தரப்பு சான்று பொருள்,–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;**

இல்லை.

**குறிப்பு;–**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் எதிரி கடந்த 14.09.2025 அன்று கைது செய்யப்பட்டு, காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**